[1972 மார்ச் 20

பேருந்துகளில் அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்

*591 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்டுடைமையாக்கப்பட்ட எல்லாப் பேருந்துகளிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளைப் பொறித்திட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஏதாவது தகராறு ஏற்பட்டு விட்டால் உடனடியாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் மீது தான் கண் விழுந்து கல் எறிவதையும் சேதப் படுத்தப்படுவதையும் பார்க்கிறோம். எனவே, அந்த நிலைமைகளை மனதில்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்கிற பொன்மொழியை ஒவ்வொரு பேருந்திலும் பொறிக்க அரசு ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்று இருக்கும் சூழ் நிலையில் அது மிகவும் பொருத்தமான யோசனைதான். ஆனால் இப்போது எதையும் தாங்கும் உடம்பு தேவைப்படுகிறது (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படிப்பட்ட பேருந்துகளில் மகாத்மா காந்தி அவர்களின் பொன்மொழிகளை எழுத இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொருத்தமாக இருந்தால் யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : இப்போது அண்ணா அவர்களின் பொன் மொழிகளை எழுதுகிற செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சில வழித்தடங்களில் பெரம்பூர், எண்ணூர் போன்ற வழித் தடங்களில் போகின்ற பஸ்களிலாவது; "கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு" என்ற வாசகம் எழுதுவதற்கு அரசு முன் வருமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை மிகவும் பொருத்தமானது தான். கத்தியைத் தீட்டுவது ஆத்திரத்தின் அறிகுறி, புத்தியைத் தீட்டுவது அறிவின் அறிகுறி.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 20]

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, பஸ்களில் இப்படி வாசகங்கள் எழுதுவது டிரைவர்களுக்கா, கண்டக்டர்களுக்கா, அல்லது பயணிகளுக்கா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எல்லோருக்கும் தான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, பல அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படம் சரியாக இருப்பதில்லை. சில பஸ்களில் திருக்குறள் சரியாக இருப்பது இல்லை. அதைச் சரியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: குறிப்பிட்ட குறைகள் ஏதேனும் இருக்குமானால், தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசுப்பேருந்துகளில் பெண்களுக்கு இடங்கள்

*592 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு ஆன இடத்தினை முதற்பகுதியில் ஒதுக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, ஆண்களும் பெண்களும் சமம் என்று போராட்டக்குரல் எழுப்பும் இந்த நாட்களில் ஆண்களுக்கு என்று தனி இடமும், பெண்களுக்கு என்று தனி இடமும், இருப்பது பெண்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. இந்த முறையை ஒழித்துவிட்டு, எல்லோரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எல்லோரும் சமம் என்ற நிலை தான் என்று இருந்தாலும் இரு வேறு உலகத்து இயற்கை என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு)